23.06.2025 O.S. 113/2018 வா.சா.1 ஞான எட்வர்ட்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

ஊத்துமலை கிராமம் புஞ்சை புல எண் 73/1ஏ மற்றும் 1 பி என்று பிரிவதற்கு முன்பு புல எண்.73/1 என்று தான் இருந்தது என்றால் சரிதான். அதற்கான பட்டா தான் பி.வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் நான் தான் தகவல் கொடுத்தேன். பிராது பாரா 3ல் 73/1ஏ சொத்தை தான் 40வருடத்திற்கு முன்பிருந்த பெரிய அந்தோணி தேவர் மற்றும் சின்ன அந்தோணி தேவர் ஆகியோர்கள் பொதுவாக அனுபவித்து வந்து பாகம் செய்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் வாய்மொழியாக செய்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது. 40வருடம் என்பது 1978க்கு முன்பே பாகம் செய்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் வாய்மொழியாக பாகம் செய்து கொள்ளப்பட்டது. என் அப்பா பெரிய அந்தோணி தேவரின் பாகத்தை 1990ல் கிரையம் கேட்டார் என்றால் சரியல்ல. பெரிய அந்தோணியின் தேவர் பாகத்தை எப்படியாவது கிரையம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் 73/1ல் எந்தபாத்தியமும் இல்லாத பாக்கியசாமி தேவரிடமிருந்து 73/1ல் தெற்கு கடைசியில் 21 செண்டை என் அப்பா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் அப்பா பாக்கியசாமிதேவரிடமிருந்து 13.2.1990ல் கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய கிரையப்பத்திரம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ 2. பிவா.சா.ஆ 2 பத்திரத்திற்கு பிறகு தான் 73/1 என்பது 73/1 ஏ , 1பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிராதில் 1978ல் இருந்து புல எண் 73/1ஏ–ஐ பெரிய அந்தோணி தேவர் அனுபவித்து வந்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 ஆவண சொத்து பாக்கியசாமி தேவருக்கு பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ 2 ஆவணம் தெரிய வந்தவுடன் என் அப்பா மீது பெரிய அந்தோணி புகார் கொடுக்க போகிற விஷயம் தெரிந்தவுடன் என் அப்பா பெரிய அந்தோணி பாகத்தை கிரையம் பெற்றார் என்றால் அவர் புகார் கொடுக்கவில்லை. பெரிய அந்தோணி தேவர் விருப்பப்பட்டு தான் கிரையம் கொடுத்தார். என் அப்பா வற்புறுத்தவில்லை. என் அம்மா 2023 ம் ஆண்டில் இறந்து போனார் என்றால் சரிதான். அப்போது எனக்கு வயது 59 என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் வயது 65 என காட்டப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். அது தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. பெரிய அந்தோணி தேவருக்கும், சின்ன அந்தோணி தேவருக்கும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எவ்வாறு பாகம் செய்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாகம் செய்தது சம்பந்தமாக பெரிய அந்தோணி தேவர் வாரிசுகளை என் தரப்பு சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. புல எண் 73/1ஏ , 1 பி உட்பிரிவு செய்தது சம்பந்தமாக சின்ன அந்தோணி தேவருக்கு அறிவிப்பு எதுவும் சார்பு செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்ன அந்தோணி தேவருக்கு 73/1ஏ , 1 பி பற்றி தெரியாது என்றால் சரிதான். பிராது 1ம்தபசில் சொத்து மட்டும் தான் பெரிய அந்தோணி தேவர் மற்றும் சின்னஅந்தோணி தேவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. புல எண் 73/1 முழுவதும் மேற்படியார்களுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. உட்பிரிவு பற்றி தெரியாததால் சின்ன அந்தோணி தேவர்அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கும் போது புல எண் 73/1ஏல் வடபாதி என பிழையாக எழுதப்பட்டு விட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள தவறை திருத்தம் செய்ய தான் வா.சா.ஆ 3 ஆவணம் 2ம் பிரதிவாதியால் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. என் அப்பா சொத்தில் அனுபவம் இல்லாத நபரிடமிருந்து பி.வா.சா.ஆ 2 ன்மூலம் கிரையம் பெற்றுவிட்டு தற்போது அதற்கு அனுசரனையாக கூடுதல் பாத்தியம் கண்டு என் தாயார் பெயரில் வா.சா.ஆ 1 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையின் மத்தியில் 2 ம் பிரதிவாதி சின்னஅந்தோணி இறந்து போனார் என்றால் சரிதான். அவரது மூத்த மகன் வியாகப்பசாமி என்றால் சரிதான். வியாகப்பசாமி 2004 ம் ஆண்டில் இறந்து போனார் என்றால் சரிதான். அவரது மனைவி பெயர் ஆரோக்கிய ஜெயமோி என்றால் சரிதான். அருள்ரோஸி, லூர்துமேரி, அனுஷியா ஆகியோர்கள் வியாகப்பசாமி பிள்ளைகள் என்றால் சரிதான். வியாகப்பசாமி மனைவி மற்றும் குழந்தைகளை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு அவசிய கட்சிகளை சேக்காத காரணத்தினால் என் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. வழக்கு 4 ம்தபசில் சொத்து வழக்கிற்கு முன்பே 1 ம்பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்தது என்றால் சரியல்ல. அது எங்களது அனுபவத்தில் உள்ளது. பெட்ரோல் பல்க் தெற்கு காம்பவுண்ட் சுவர் வரை உள்ள சொத்தில் எங்களுக்கு எந்த பாத்தியமும், அனுபவமும் இல்லை என்றால் சரிதான். பெட்ரோல் பல்க் தெற்கு காம்பவுண்ட்க்கு தென்பக்கம் 8 அடி அகலத்தில் கிழமேலாக 1 ம்பிரதிவாதி தன்னுடைய இடத்திற்கு போவதற்காக பாதை போட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் எங்களுக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. அது எங்களுடைய சொத்து. 1 ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு அவரது பெயருக்கு தனியாக பட்டா எண் 3708 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா தவறாக கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு நீள அகலம் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. பாக்கியசாமி பாண்டியன் என்பவடமிருந்து வாங்கிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல்

செய்யாததற்கு காரணம் உண்டா என்றால் இல்லை. பெரியஅந்தோணி தேவர் கிறிஸ்தவர் என்றால் சரிதான். அவருக்கு எந்த வழியில் சொத்துக்கள் கிடைத்தாலும் அவரது வாரிசுகளுக்கு அவர் உயிருடன்இருக்கும் வரை எந்த பாத்தியமும் அதில் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பெரிய அந்தோணி தேவரின் வாரிசுகளை வா.சா.ஆ 1 ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. சின்ன அந்தோணி தேவருக்கு வழக்கிற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு பாகம் கிடைத்த சொத்தை தான் அவரது மகளுக்கு வா.சா.ஆ 3 மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பெரிய அந்தோணி தேவருக்கு புல எண் 73/1ஏ–ல் 47–1/2 செண்டு மட்டும் தான் உண்டு என்றால் சரியல்ல. அதற்கு கூடுதலாக பாத்தியம் கண்டு பெரிய அந்தோணி தேவர் வகையாறக்களிடம் இருந்து என் அம்மா வாங்கியுள்ள வா.சா.ஆ 1 ஆவணம் 1.,2 பிரதிவாதிகளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணம் 2 ம்பிரதிவாதியின் பாகத்தை பொறுத்து சட்டபடி இல்லா நிலையது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களை பிரிக்கும் விதமாக பூமியில் பொழி இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிராது 3 ம்தபசில் சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. பிராது 4 ம்தபசில் சொத்து பிராது 3 ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி இல்லை என்றால் சரியல்ல. என் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் செலுத்தியுள்ள முத்திரை கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. என் வழக்கு 1 ம்பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் முத்திரை தாள் விற்பனையாளராக பணி செய்து வருகிறேன் என்றால் சரிதான். பத்திர பதிவு சார்ந்த சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஊத்துமலை கிராமம் முன்பு ஊத்துமலை ஜமீன் நிர்வாகத்தில் இருந்து வந்து ஜமீன் ஒழிப்பிற்கு பின்பு தமிழக அரசால் சர்வே செய்யப்பட்டு

செட்டில்மெண்ட் பதிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி தபசில் சொத்து அமைந்துள்ள சர்வே எண் 73/1ல் உள்ள மொத்த இடம் 1 ஏக்கர் 37 செண்ட் என்றும், அது பெரிய அந்தோணி தேவர் மற்றும் சின்னஅந்தோணி தேவர் ஆகிய இருவர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ஏக்கர் 37 செண்டை பெரிய அந்தோணி தேவர் மற்றும் சின்ன அந்தோணி தேவருக்கு ஆகிய இருவருக்கும் தலா பாதியாக 68-1/2 செண்ட் வீதம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மற்றும் ஒரு பாக்கியநாத தேவருக்கும் சொத்து பாத்தியப்பட்டதாகும். மேற்படி பாக்கியநாத தேவர் என்பவாின் மகன் பாக்கியசாமி பாண்டியன் ஆவார். அவரிடமிருந்துஎன் அப்பா ஆவண எண். 128/90 ன்படி கடந்த 13.2.1990 ல் என் அப்பா 21 செண்ட் நிலத்தினை கிரையம் எழுதி பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 21 செண்ட்நிலமானது மொத்தமுள்ள 1 ஏக்கர் 37 செண்ட் நிலத்தில் தெற்கு ஓரமாக உள்ளது என்றால் சரியல்ல. தென்மேற்கு பக்கமாக உள்ளது. என்னிடம் காட்டப்படுவது புல எண் 73 க்குரிய புலவரைபடம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ 3. என் அப்பாவிற்கு கிரையம் கொடுத்த பாக்கிய நாத தேவருக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபருக்கு கிரையம் கொடுத்த பாக்கியசாமி பாண்டியன் என்பவருக்கு மேற்படி 21 செண்ட்நிலம் எவ்வித பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது பிராதில் 1ம் தபசில் சொத்து என சர்வே எண் 73/1ஏ-ல் 1 ஏக்கர் 16 செண்ட் நிலத்தினை 1ம் தபசிலாக காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மொத்தமுள்ள 1 ஏக்கர் 37 செண்டை காட்டவில்லை என்றால் சரிதான். எனது பிராது 1ம் தபசிலான 1 ஏக்கர் 16 செண்ட் நிலத்தில் தென்பாகம் 2ம் தபசிலாகவும், வடபாகம் 3ம் தபசிலாகவும் தலா 58-1/2 செண்ட் என பாகம் பிரித்து காட்டி அவற்றை முறையே தென்பாகம் பெரிய அந்தோணி தேவருக்கும், வடபாகம் சின்ன அந்தோணி தேவருக்கும் பாத்தியப்பட்டது என

கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 4ம் தபசில் என கூறி வழக்கு தாக்கல் செய்துள்ள 10.5 செண்ட் நிலமானது மொத்தமுள்ள 1 ஏக்கர் 37 செண்ட் நிலத்தில் சரிபாதி வடபாகமான 68.5 செண்ட் நிலத்தில் தெற்கோரத்து பாகம் 10.5 செண்ட் என்றும், அது பாக விகிதபடி சின்ன அந்தோணி தேவருக்கு பாத்தியப்பட்டது என்றும் அவரை அதை தன் குமாரத்தியான 1ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணப்படியும். அதன் பிழை திருத்த ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றாலும் ., நான் என் அப்பாவின் மோசடி கிரைய ஆவணத்தின் அடிப்படையிலாக மேற்கூறிய மொத்தமுள்ள 1 ஏக்கர் 37 செண்ட் நிலத்தில் தெற்கோரம் கிழமேலாக 20 செண்ட் நிலத்தினை நீக்கி மீதமுள்ள 1 ஏக்கர் 16 செண்ட் மட்டுமே 1ம்தபசில் என கூறியும், அதில் வடபாதி தெற்கோரம் கிழமேலாக சொத்து 4ம் தபசில் சொத்து என கூறி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.